# தமிழ் - மேல் நிலைக்கல்வி (304)

## (அக மதிப்பீடு) **Tutor Marked Assignment** (2024-25)

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) சிறுகதையின் திருப்பம் எப்படி அமைய வேண்டும்? (பாடம் 26)
   (ஆ) விளம்பரத்தின் நன்மைகள் இரண்டினை எழுதுக. (பாடம் 30)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) தமிழில் முதல் இணையதளம் எது? (பாடம் 32)
   (ஆ) மின்நூலகம் என்பது என்ன? (பாடம் 33)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) மின்னஞ்சல் முகவரி என்றால் என்ன? (பாடம் 34)
   (ஆ) முகவருக்கு வேண்டிய பேச்சுத் திறன் எத்தகையது? (பாடம் 36)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி உருவாக்கிய தொண்டு அமைப்புகள் பற்றி விளக்குக. (பாடம் 19)
   (ஆ) காற்று மாசுபடுதல் குறித்து கட்டுரை வரைக. (பாடம் 20)

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) நிகழ்வுக் குறிப்பு எழுதும் முறை குறித்து எழுதுக. (பாடம் 41)
   (ஆ) கீழ்கண்ட பகுதியை படித்து மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக. (பாடம் 17)

**Contact for Solutions Unnati Educations**
**9899436384, 9654279279**

பிறர் பிழை பொறுத்தல்

இராமலிங்கருக்கு இரசவாத வித்தை செய்யத் தெரியும். இரும்பு முதலிய உலோகங்களையெல்லாம் பொன்னாக மாற்றும் வித்தையே இரசவாதவித்தை அன்பர்கள் ஒரு நாள் இராமலிங்கரிடம் இரசவாத வித்தைச் செய்து காட்டுமாறு வேண்டினார். இராமலிங்கர் அவர்கள் விரும்பியபடி மூலிகைகளைப் பயன்படுத்தி இரசவாத வித்தை செய்து உலோகங்களைப் பொன் ஆக்கிக் காட்டினார். ஆனால் வேம்பையார் என்பவர் இராமலிங்கரின் உடன் இருந்து கவனித்ததால் யாருக்கும் தெரியாமல் இரசவாத வித்தையைச் செய்தார். அப்போது அவருடைய கண்கள் ஒளி மங்கி விட்டன. இறுதியில் இராமலிங்கரிடம் வந்தார். இராமலிங்கரிடம் அவர் பிழையைப் பொறுத்துச் சிறிது தண்ணீர் கொடுத்து வேம்பையாரின் கண்களைக் கழுவச் செய்தார். அவருக்கு மீண்டும் கண் பார்வை ஏற்பட்டது. இது இராமலிங்கரின் பிழைப் பொறுக்கும் பண்பைக் காட்டுகின்றது.

திருவருட்பா வெளியீடு

வள்ளலாரின் பாடல்களைக் கேட்டு அவர் அன்பர்கள் தம் மனத்தைப் பறி கொடுத்தனர். அவர் பாடல்களை மக்கள் அறிந்து மகிழ்ந்து பயன்பெற வேண்டும் என்று எண்ணினர், எனவே அவர் அன்பர்கள் அவரிடம் அப்பாடல்களைப் பதிப்பிக்க அனுமதி வேண்டினர். இராமலிங்கர் அதற்கு இசைவு கொடுத்தார். எனவே அவர் மாணவர்களில் ஒருவராகிய தொழுவூர் வேலாயுத முதலியாரால் இராமலிங்கர் பாடல்கள் தொகுக்கப்பட்டுத் திருமுறைகளாக 1867 - இல் வெளியிடப்பட்டன.

உணவு அளிக்கும் ஆற்றல்

இராமலிங்கர் தருமசாலை அமைத்து அங்கு வருவோர்களுக்கு உணவு அளித்து வந்தார். ஒரு நாள் தரும சாலைக்கு நூறு பேர் வந்து விட்டனர். இரவு நேரம் எனவே நூறு பேருக்குத் திடீரென உணவு எப்படிக் கொடுக்க முடியும் என அங்குள்ளோர் திகைத்தனர். இராமலிங்கர் வந்தார். பிச் என்றார். இலையைப் போடக் கூறினார். அவ்வாறே இலைகளைப் போட்டனர் அனைவருக்கும் உணவு கிடைத்தது. உணவு இருந்த பாத்திரம் குறையாமல் நிரம்பி இருந்தது.

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6

(அ) தன்விவரக் குறிப்பு -படிவம் ஒன்றை தயார் செய்க. (பாடம் 15)

(ஆ) பின்வரும் பத்தியினைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. (பாடம் 26)

சிறுகதை மேலை நாட்டிலிருந்து நமக்குக் கிடைத்த இலக்கிய வடிவம். சிறுகதை என்ற சொல் Short story என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பு. சிறுகதை என்றால் சிறிய கதை அல்ல. வாழ்வின் சிறு துளி. குறிப்பிட்ட காலத்தில் படிக்கக் கூடியது. குறிப்பிட்ட பக்கங்களில்

**Contact for Solutions Unnati Educations 9899436384, 9654279279**

எழுதப்படுவது. இவை எல்லாவற்றையும் விடக் குறிப்பாக ஒரு நிகழ்வை, ஓர் உணர்வை, ஒரு கருத்தைச் சொல்லக் கூடியது.

சிறுகதை அமைப்பு ஒருமை கொண்டது. தேவையற்றச் செய்திகள் இருக்காது. நேரடியாக முடிவை நோக்கிச் செல்லும். சிறுகதையின் மையம் அதில் அமையும் திருப்பம் தான் சிறுகதை வாழ்க்கையின் ஒரே புள்ளியை மட்டுமே எடுத்தியம்பும் தன்மை கொண்டது.

சிறுகதையின் உறுப்புகள்

சிறுகதை என்ற வடிவத்தின் இலக்கணப் பண்புகள் பலவுண்டு. சிறுகதையின் உறுப்புகளாகச் சிலவற்றைக் கூறலாம்.

மையக் கதாபாத்திரம்

சிறுகதையைப் பற்றிப் பேசும் போது இது யாரைப் பற்றிய கதை என்றோ எதைப்பற்றிய கதை என்றோ கேட்பது வழக்கம். அவனோ, அவளோ, அதுவோ எப்பாத்திரம் கதையை நடத்திச் செல்கிறதோ அதை மையக் கதாபாத்திரம் என்பர்.

எதிர் கதா பாத்திரம்

சிறுகதையில் மையக் கதாபாத்திரத்திற்கு எதிர் நிலையில் இயங்கக் கூடியது எதிர் கதாபாத்திரம். இதுவே கதையில் சிக்கலை உருவாக்கி கதைக்கு ஈர்ப்பைத் தரும்.

கதைக்களம்

கதை நடக்கும் காலம், சூழல் ஆகியன கதைக்களம் எனப்படும். கதையின் சித்தரிப்புகளுக்கு எங்கே, எப்போது என்ற கதைக்களம் முக்கியமானதாகிறது. இது கதைக்கு நம்பகத் தன்மையைத் தரும்.

(அ) சிறுகதை என்றால் என்ன?

(ஆ) சிறுகதைக்கான ஆங்கிலச் சொல் என்ன?

(இ) மையக்கதாபாத்திரம் என்றால் என்ன?

----------------

**Contact for Solutions Unnati Educations**
**9899436384, 9654279279**